திருகோணமலை நலன்புரிச் சங்கம்

வழங்கும்

# திருமலை இரவு '13

ரொரன்ரோ – கனடா மார்கழி 15, 2013

**Toronto - Canada - December 15, 2013**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**RESIDENTIAL COMMERCIAL**
INVESTMENT PROPERTIES

☑ Allow me to be your family real estate representative, the service I provide goes well beyond just selling or finding you a home.



**SOTHEES**
Kathirgamathamby
SALES REPRESENTATIVE

HOMELIFE
HIGHER STANDARDS

sothees.com
sothees@rogers.com
Cell 416.704.1179

HomeLife/Miracle Realty Ltd.,
Brokerage independently owned & operated

**1.855.SOTHEES**
**1.855.768.4337**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Trincomalee Welfare Association

TWA

திருகோணமலை நலன்புரிச் சங்கம்

## திருகோணமலை நலன்புரிச் சங்கம்

வழங்கும்

# திருமலை இரவு 2013

றொரன்ரோ – கனடா மார்கழி 15, 2013

**Toronto - Canada December 15, 2013**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்



பொருள் பக்கம்

1. தலைவர் செய்தி....................................03
2. வாழ்த்துரை - திரு. இரா. சம்பந்தன், நா.உ. ...............04
3. வாழ்த்துரை - திரு. சி. தண்டாயுதபாணி, மா.ச.எ.த .......05
4. வாழ்த்துரை - திரு. இ. கைலைவாசன் ................06
4. திருகோணமலை நலன்புரிச் சங்கப் பணிகள் ................07
5. திருகோணமலை ஓர் அறிமுகம் ........................10
6. திருகோணமலையில் தமிழர் எதிர்நோக்கும் ..............12
7. கன்னியா வெந்நீர் ஊற்று ..................................14
8. இராச இராச சோழன் .......................................20
9. சிறார் இல்லப் புரவலர்.......................................22
10. தி.ந.ச. செயற்குழு (கனடா)...................................23
11. தி.ந.ச. செயற்குழு (திருகோணமலை)......................24
12. நன்றியுரை.............................................25
13. விளம்பரங்கள்.............................................26



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருகோணமலை நலன்புரிச் சங்கம்
## ரொரன்ரோ - கனடா



## தலைவர் செய்தி

திருகோணமலை இரவு 2013 நிகழ்ச்சியின் பொருட்டாக நாமெல்லாம் கூடியுள்ள இந்நன்னாளில் சங்கச் செயற்பாட்டுக்கு உறுதுணையாக விளங்கி வரும் புரவர்கள், வள்ளல்கள், நலன்விரும்பிகள், திருகோணமலை மாவட்ட மக்கள், சங்க உறுப்பினர்கள், சங்க நிருவாகிகள் உள்ளிட்ட அவைருக்கும் திருகோணமலை நலன்புரிச் சங்கத்தின் சார்பில் வணக்கத்தையும் வாழ்த்துக் களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கடந்த ஆண்டுகளைப் போலவே இந்நிதியாண்டிலும் ஆதரவற்ற சிறார் வளர்ப்பு, ஆதரவற்ற பல்கலைக்கழக மாணவரைப் படிப்பித்தல், வசதியற்ற பள்ளி மாணவருக்குக் கற்கைக் கருவிகள் வழங்கல், ஆசிரியப் பற்றாக்குறை உள்ள பள்ளிகளில் சிறப்பு வகுப்புகளை நடத்துதல், கைம்பெண்களுக்கு வருவாய் தரும் தொழில்களை உருவாக்கிக் கொடுத்தல், மீள் குடியமர்வோருக்கு உதவிகளை அளித்தல், இயற்கைப் பேரிடர்களால் இன்னலுறுவோருக்கு இடருதவி வழங்கல் முதலிய பணிகளைச் சிறப்பாகச் செய்துள்ளோம்.

சாம்பல் தீவு, மல்லிகைத் தீவு ஆகிய இடங்களில் அமைந்துள்ள எமது சிறார் இல்லங்களில் வளரும் பிள்ளைகளுக்கு உணவு, உடை, மருத்துவம், கல்வி, பொழுது போக்கு ஆகியனவற்றை இடையறாது வழங்கப் பணவுதவி அளித்து வரும் புரவலர்களான மருத்துவர் சிறீதரன் சின்னத்துரை, மருத்துவர் சிறீராணி இராசேசுவரன், பல்மருத்துவர் இருதயநாதன் விசயநாதன், கணக்காளர் கே. தெய்வேந்திரநாதன், வழக்கறிஞர் தில்லையம்பலம் ஜெகதீசன், வழக்கறிஞர் பொன்னம்பலம் கயிலாயநாதன் ஆகியோரை நன்றியோடு நினைவு கொள்வதோடு அவர்கள் மீதான மாறாப் பற்றுதியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆதரவற்ற பல்கலைக்கழக மாணவர் கல்வியைத் தொடரத் திங்கள் தோறும் உதவி வரும் கல்வி வள்ளல்களான திருமதிகள் அமிர்தவல்லி இரத்தினராசா. விமலா இராசசிங்கம், சயானா யோகேசுவரன், லீசா இளங்கோவன், அசுந்தா பேதுறு, திருவாளர்கள் கு.இராசலோசனன், த சந்திரபாபு, எஸ். இராசகுமார், ந நிரஞ்சன், வை. இரவீந்திரன், சோ.இரகுராம், வின் மகாலிங்கம், ஆகியோரை நன்றியோடு நினைவு கொள்கின்றோம்.

திருகோணமலை மாவட்டத்தின் பின்தங்கிய பகுதிகளில் வாழும் வறிய மாணவருக்கு கற்கைக் கருவிகள் வழங்கவும் சிறப்பு வகுப்புகளை நடத்தவும் நிதியுதவி வழங்கிய கொடையாளர்களையும் இவ்வேளையில் நன்றியோடு எண்ணிப்பார்க்கிறோம்.

பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு வருவாய் தரும் தொழில்களை உருவாக்கவும் மீள்குடியமரும் மக்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்கவும் குடும்பத்துக்கு ஆயிரம் டொலர்ப்படி உதவி வழங்கிய கொடையாளர்களையும் பேரிடர்க் காலங்களில் இடருதவி வழங்கத் துணைநின்ற அன்பு உள்ளங்களையும் இந்நன்னாளில் நெஞ்சிலே நிறுத்துகிறோம்.

பாதிக்கப்பட்ட மக்களது நலன்கருதித் திருகோணமலை நலன்புரிச்சங்கம் ஆற்றிவரும் அனைத்துப் பணிகளுக்கும் கைமாறு கருதாது பொருளுதவி, செயலுதவி, ஆக்கம், ஊக்கம், ஆற்றுப்படுத்தல் ஆகியன அளித்து வரும் அனைவருக்கும் திருகோணமலை நலன்புரிச் சங்கத்தின் சார்பில் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

நன்றி.

**ச. குகதாசன்**
தலைவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**R. SAMPANTHAN**
*Member of Parliament*
Trincomalee
Leader Illankai TamilArasu Kadchi
Leader Tamil National Alliance



10th December, 2013

I am extremely happy to send my good wishes and felicitations to the Trincomalee Welfare Association at Toronto in Canada on the occasion of their annual event.

The Trincomalee welfare Association has been continuing with its valuable services. They have helped in the field of education both at the school level and at the university level, also in the field of the handicapped such as orphans and widows. They have also helped displaced persons resettling in their areas of residence to recommence their lives and also been of assistance to persons adversely affected by natural calamities. They have been of immense help to persons in genuine need in several areas. Both the recipients and general public are grateful to the Trincomalee Welfare Association for all the services rendered by them.

It is the earnest wish of every one they would continue to be of service to their fellow beings in need.

We thank them whole heartedly for their service and wish them the very best.

R. Sampanthan

(R.SAMPANTHAN)

MEMBER OF PARLIAMENT
TRINCOMALEE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிழக்கு மாகாண சபை
නැගෙනහිර පළාත් සභාව
**EASTERN PROVINCIAL COUNCIL**

தொடர் இல
யොමු අංකය
Ref No:

9-12-2013

## வாழ்த்துச் செய்தி

கனடா, திருகோணமலை நலன்புரிச் சங்கத்தினரின் 2014ம் ஆண்டுக்கான ஒன்று கூடல் நிகழ்வுக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

கனடாவிலுள்ள எமது புலம்பெயர்ந்த உறவுகள் கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக திருகோணமலை மாவட்டத்திலுள்ள எமது மக்களுக்கு ஆற்றிவரும் சீரிய பணிகளையிட்டு நான் மிகவும் பெருமையடைகின்றேன். பல்வேறு காரணங்களினால் தாயகத்தை விட்டுச்சென்று கனடாவில் குடிபுகுந்து கொண்டாலும் போரினாலும், இடப்பெயர்வினாலும், இயற்கை அனர்த்தங்களினாலும் பாதிக்கப்பட்ட எம்மக்களை மறந்துவிடாமல் தங்களால் இயன்ற உதவிகளை செய்து கொண்டிருக்கும் எமது உறவுகளை பாராட்ட வேண்டியது எமது கடமையாகும்.

பெற்றோரை இழந்த வசதிகளற்ற மாணவர்களுக்கு கல்வி அளிப்பதைத்தான் திருகோணமலை நலன்புரிச் சங்கத்தின் பணிகளில் மிக மேன்மையான பணியாக நான் கருதுகின்றேன்.

சாம்பல்தீவிலும், மல்லிகைத்தீவிலும் மாணவர் இல்லங்களை அமைத்து அங்கே அநாதரவான பிள்ளைகளை வைத்துப் பராமரித்து அவர்களுக்கு கல்வியை அளிப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சி ஒரு உன்னதமான பணியாகும். நாளைய சமூகத்தில் இந்தப்பிள்ளைகள் தலைநிமிர்ந்து நிற்பதற்கான ஒரு அடிப்படையை இந்தப் பணி ஏற்படுத்தியிருக்கின்றது என்றால் அது மிகையல்ல.

கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் பயிலுகின்ற, பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு மாதாந்த உதவித்தொகை வழங்குகின்ற திட்டமும் குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டியதாகும்.

கடந்த ஒரு வருடமாக திருகோணமலை மாவட்டத்தில், திருகோணமலை நலன்புரிச்சங்கம் மேற்கொண்ட மனிதாபிமானப்பணிகளிலும், வாழ்வாதார விருத்தி நடவடிக்கைகளிலும் நானும் இணைந்து பணியாற்றுவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது.


இவ்வருடத்தின் ஆரம்பத்தில் திருகோணமலை மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கியமையும், 25 ஆண்டுகளுக்குப் பின் மீள் குடியேற்றம் செய்யப்பட்ட தென்னமரவாடி கிராமத்திலுள்ள விதவைகளுக்கு கறவைப் பசுக்கள் வழங்கப்பட்டமையையும் நினைவு கூருகின்றேன்.

திருகோணமலை நலன்புரிச் சங்கம் தொடர்ந்தும் தனது கல்வி, மனிதாபமானப் பணிகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். சங்கத்தின் தலைவர் மற்றும் நிர்வாகிகளுக்கும், புலம்பெயர்ந்து கனடாவில் வாழும் எமது உறவுகளுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

சி.தண்டாயுதபாணி,
மாகாண சபை உறுப்பினர்,
எதிர்க்கட்சித் தலைவர்,
கிழக்கு மாகாண சபை,
திருகோணமலை,
இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை



திருகோணமலை நலன்புரிச் சங்கம்
திருகோணமலை

கனடாவிலுள்ள திருகோணமலை நலன்புரிச் சங்கமானது தனது ஆண்டு ஒன்றுகூடலை 2013-12-15ஆம் நாளன்று நடத்துவதை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். இவ்விழாச் சிறப்பாக அமைய எமது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கனடாவிலுள்ள திருகோணமலை நலன்புரிச் சங்க நிதி உதவியில் சாம்பல் தீவு, மல்லிகைத் தீவு ஆகிய இடங்களில் அமைந்துள்ள அன்னை சாரதா இல்லங்களில் வதியும் ஆதரவற்ற பிள்ளைகளுக்கு உணவு உடை உறைவிடம் உள்ளிட்ட அனைத்துத் தேவைகளையும் நிறைவு செய்வதோடு கல்வியும் வழங்கி வருகிறோம். மேலும் ஆதரவற்ற பல்கலைக் கழக மாணவர்களின் படிப்பை முடிக்க நிதி உதவியும் அளிக்கிறோம்.

இவை மட்டுமன்றி மீள் குடியேற்ற உதவி, பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு வருவாய் தரும் தொழில் உருவாக்கம் முதலியவற்றையும் தாயகத்தில் செயற்படுத்தி வருவதையும் இவ்விடத்தில் குறிப்பிடுவது பொருத்தமானதென நம்புகிறேன். இந்த உதவிகளை நாம் நன்றியோடு வரவேற்கிறோம்.

இச்செயற்பாடுகளுக்குத் திருகோணலையிலிருந்து புலம்பெயர்ந்து கனடாவில் வாழும் எமது மக்கள் தம்மாலான பங்களிப்பை வழங்க வேண்டுமென அன்போடு வேண்டி நிற்கின்றோம்.

நன்றி

இ. கைலைவாசன்
செயலாளர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை நலன்புரிச் சங்கப் பணிகள்

திருகோணமலை நலன்புரிச் சங்கமானது எமது தாயகத்திலே ஆதரவற்ற சிறார் வளர்ப்பு, ஆதரவற்ற பல்கலைக்கழக மாணவரைப் படிப்பித்தல், வசதியற்ற பள்ளி மாணவருக்குக் கற்கைக் கருவிகள் வழங்கல், ஆசிரியப் பற்றாக்குறை உள்ள பள்ளிகளில் சிறப்பு வகுப்புகளை நடத்துதல், கைம்பெண்களுக்கு வருவாய் தரும் தொழில்களை உருவாக்கிக் கொடுத்தல், மீள் குடியமர்வோருக்கு உதவிகளை அளித்தல், இயற்கைப் பேரிடர்களால் இன்னலுறுவோருக்கு இடருதவி வழங்கல் முதலிய பணிகளைக் கடந்த பத்தாண்டுகளாகச் செய்து வருவதைத் தாங்கள் அறிவீர்கள்.

சங்கப் புரவலர்கள், வள்ளல்கள் மற்றும் நலன்விரும்பிகள் வழங்கும் நன்கொடைகள், திருகோணமலை இரவு நடத்துதலால் கிடைக்கும் வருவாய் முதலியவற்றைக் கொண்டு மேற்படி திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றோம்.

எமது தாயகத்திலே இடம்பெற்ற போராலும் இயற்கைப் பேரிடர்களாலும் ஆயிரக்கணக்கான சிறார் பெற்றார், உற்றார் மற்றும் உறவினரை இழந்து ஆதரவற்றோர் ஆகிவிட்டமையை நீங்கள் அறிவீர்கள். இத்தகைய சிறாரது நலன்கருதிச் சாம்பல் தீவிலும் மல்லிகைத் தீவிலும் இரண்டு இல்லங்களை அமைத்துள்ளதையும் நீங்கள் அறிவீர்கள். மேற்படி ஆதரவற்ற சிறார்களை இவ்வில்லங்களில் வைத்து உணவு, உடை, உறைவிடம், மருத்துவம், கல்வி, பொழுதுபோக்கு முதலியன வழங்கி வளர்த்து வருகின்றோம்.



2006ஆம் ஆண்டில் இந்த இரண்டு இல்லங்களிலும் அறுபதுக்கு மேற்பட்ட சிறார் இருந்தனர். அகவை வந்த பலர் படிப்பை முடித்து வேலைதேடிக் கொண்டு அல்லது குடும்ப வாழ்க்கையில் இணைந்து கொண்டு வெளியேறியுள்ளனர். இதனால் இல்லங்களில் வதியும் மாணவர் தொகை முப்பத்தெட்டாகி உள்ளது. இன்று உள்ளவாறு சாம்பல்தீவு இல்லத்தில் பதினாறு ஆண் பிள்ளைகளையும் மல்லிகைத் தீவு இல்லத்தில் இருபத்தியிரண்டு பெண்பிள்ளைகளையும் வைத்து வளர்த்து வருகின்றோம்.

இவர்களை வளர்ப்பதற்கு இரண்டு விடுதிக் காப்பாளர்கள், இரண்டு சமயற்காரர்கள், இரண்டு காவலர்கள் ஆகியோரைப் பணிக்கு அமர்த்தி உள்ளோம். இந்த இரண்டு இல்லங்களையும் நடத்துவதற்கு இன்றுள்ள நிலையில் திங்கள் தோறும் 2000 கனடிய டொலர் செலவேற்படுகின்றது.





தாயகத்திலே பெற்றோரை இழந்த பல்கலைக் கழக மாணவர் பலர் கல்வியைத் தொடர முடியாத நிலையில் உள்ளனர் என்பதை நீங்கள் அறிவீர்கள். இத்தகைய நிலையில் உள்ள மாணவரில் மிகவும் இன்னலும் 21 மாணவரை நாம் பொறுப்பேற்றுக் கல்வியைத் தொடரத் திங்கள் தோறும் பணம் அனுப்பி வருகின்றோம். இதன் பொருட்டு மாதம் 630


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கனடிய டொலர் செலவேற்படுகின்றது. இவர்களது கல்வி முடியும்வரை இவ்வுதவியைத் தொடர வேண்டும். இவர்களது கல்வி முன்னேற்றத்தைத் திருகோணமலையிலும் கனடாவிலும் உள்ள திருகோணமலை நலன்புரிச் சங்கங்கள் தொடர்ச்சியாகக் கண்காணித்து வருகின்றன.

திருகோணமலை மாவட்டத்தின் மீள் குடியமர்ந்த பகுதிகளில் உள்ள குடும்பங்களும் இடம் பெயர்ந்து வாழும் குடும்பங்களும் வறுமைக் கோட்டுக்குக் கீழான வருவாயைக் கொண்டவர்களாக உள்ளன. இவர்களால் தத்தம் பிள்ளைகளது கல்விக்குரிய அடிப்படைக் கற்கைக் கருவிகளை வாங்கிக் கொடுக்க முடியாதுள்ளது. இத்தகைய குடும்பங்களில் உள்ள மாணவருக்குத் தேவைப்படும் கற்கைக் கருவிகளை அவ்வவ் பொழுது வழங்கி வருகின்றோம். பிறரையும் வழங்கச் செய்கின்றோம்.

திருகோணமலை மாவட்டத்தின் ஊர்ப்புறங்களில் உள்ள பாடசாலைகள் பலவற்றில் க.பொ.த. சாதாரணம் மற்றும் உயர்தர வகுப்புக்களுக்குக் கற்பிக்கக் கூடிய போதுமான ஆசிரியர்கள் இல்லை. இப்பள்ளிகளில் பயிலும் மாணவரது நன்மை கருதிக் க.பொ.த. சாதாரணம் மற்றும் உயர்தரத் தேர்வுக்கு முன்பு ஓரிரு மாதங்களுக்கு தகுதியான ஆசிரியர்களைக் கொண்டு சிறப்பு வகுப்புகளை நடத்தி வருகின்றோம். இச்செயற்பாடானது தமக்குப் பெரிதும் உதவியாக உள்ளதாகப் பின்தங்கிய பகுதிகளில் உள்ள மாணவரும் பெற்றோரும் எமக்குத் தெரிவித்துள்ளனர்.

தாயகத்திலே இடம் பெற்ற போரினால் 90,000 மேற்பட்ட பெண்கள் கணவரை இழந்து கைம்பெண்கள் ஆகியுள்ளதை ஊடகங்கள் வாயிலாக நீங்கள் அறிந்து இருப்பீர்கள். இப்பெண்களில் கணிசமானோர் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்தோர் என்பதை நாங்கள் உங்களுக்குக் கூற வேண்டியதில்லை. இந்தக் கைம்பெண்களில் கூடுதலானோர் எவ்வித வருமானமும் வினைத்திறனும் அற்றவராக உள்ளனர். நாங்கள் இக்கைம்பெண்களுக்கு அவர்கள் செய்யக் கூடிய கோழி வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, மாடுவளர்ப்பு, தையல் முதலிய வருமானம் தரக் கூடிய தொழில்களை உருவாக்கிக் கொடுத்து வருகிறோம். ஒரு குடும்பத்துக்கு 1000 டொலர் செலவில் இத்தொழில்களை உருவாக்கிக் கொடுத்து வருகின்றோம். இதன்மூலம் பெண்கள் தலைமை தாங்கும் இக்குடும்பங்கள் தமது சொந்தக் காலில் நிற்கக் கூடிய நிலை ஏற்படுகின்றது.

தாயகத்திலே இடம் பெற்ற போர் காரணமாக எல்லைக் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் இடம்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர்ந்ததை நீங்கள் அறிவீர்கள். இம்மக்கள் இப்பொழுது தத்தம் ஊர்களில் மீள்குடியமர விரும்புகின்றனர். எனினும் அதற்குத் தேவையான பணவசதி இவர்களிடம் இல்லை. இதை உரிய அளவு கொடுப்பதற்கும் யாருமில்லை. திருகோணமலை நலன்புரிச் சங்கமானது குடும்பம் ஒன்றுக்கு 1000 டொலர்ப்படி செலவிட்டு இம்மீள்குடியமர்வை உறுதிப்படுத்தி வருகின்றது. பிற அமைப்புகளையும் இவ்வாறு செய்யத் தூண்டி வருகின்றது. இறுதியாகத் திருகோணமலையில் வடக்கு எல்லை ஊரான தென்னன்மரவடியில் இத்தகைய மீள்குடியமர்வு உதவியை வழங்கியுள்ளோம். தென்னன்மரவடி மக்கள் 1984 - 85ஆம் ஆண்டில் இடம் பெயர்ந்து வன்னிக்குச் சென்றனர். வன்னியில் இடம் பெற்ற போரில் பலர் மடிந்து போயினர். எஞ்சியோர் ஏறத்தாழ 30 ஆண்டுகளுக்குப் பின்பு தமது சொந்த ஊருக்குத் திரும்பி உள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கதாகும். இவ்வாறு பல இடங்களில் மீள்குடியமர்வை ஊக்குவிக்க வேண்டிய தேவை உள்ளது என்பது நோக்கத்தக்கது.

கிழக்கு மாகாணத்தில் அவ்வவ்பொழுது பெருமழை, வெள்ளம் முதலிய பாதிப்புகள் ஏற்படுவதைத் தாங்கள் அறிவீர்கள். இத்தகைய பாதிப்புக் காலத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாகத் தேவைப்படும் உணவு, உடை, மருந்து, பால், படுக்கைவிரிப்பு முதலிய இடருதவியை வழங்கி வருகின்றோம். இத்தகைய இடருதவியைத் திருகோணமலை மாவட்டத்தில் மட்டுமன்றி மட்டக்களப்பு, அம்பாறை, மன்னார், கிளிநொச்சி முதலிய பிறமாவட்டங்களுக்கும் செய்துள்ளோம் என்பதை இவ்விடத்தில் கூறுவது பொருத்தமானதென நம்புகிறோம்.









திருகோணமலை நலன்புரிச் சங்கம் இத்தகைய பணிகளைப் பாதிக்கப்பட்ட எம்மக்களுக்குச் செய்வதற்கும் பொருளுதவி வழங்கி வரும் புரவலர்கள், வள்ளல்கள், நலன்விரும்பிகள், சங்கச் செயற்குழு உறுப்பினர்கள். சங்க உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் திருகோணமலை நலன்புரிச் சங்கம் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை ஓர் அறிமுகம்

திருகோணமலை இலங்கைத் தீவின் கிழக்குக் கரையில் அமைந்து உள்ளது. இதற்கு வடக்கே முல்லைத்தீவு, தெற்கே மட்டக்களப்பு, மேற்கே அநுராதபுரம் ஆகிய மாவட்டங்கள் எல்லைகளாக உள்ளன. கிழக்கே கடல் அமைந்து உள்ளது. இதன் பரப்பளவு 1110 நாற்கல் ஆகும். இம்மாவட்டத்தில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐவகை நிலப்பிரிவுகளும் உள்ளன.


இங்கு மிக நீண்ட காலமாகத் தமிழர் வாழ்ந்து வருகின்றனர். "திருகோணமலை சைவமும் தமிழும் தோன்றிய இடம்" என பிரித்தானியக் கலைக் களஞ்சியம் விளக்கம் கூறுகின்றது. இந்த நகரைச் "சைவர்களின் உரோமாபுரி" என மேலை நாட்டுக் கிறித்தவத் துறவியர் குறிப்பிட்டுள்ளனர். தொல்லியல் ஆய்வுகள், வரலாற்றுக் குறிப்புகள் முதலியனவும் இதற்குச் சான்றாகும்.

இந்த நகருக்கு வரலாற்றில் பல்வேறு பெயர்கள் வழங்கி உள்ளன. கோணமலை, கோணமாமலை, கோகர்ணம், தென்கயிலாயம், திருக்கோணாமலை, திருக்குன்றாமலை, திரிகோணமலை, திருமலை என்பன அவையாகும். திருகோணமலை ஒரு பக்கம் கடலாலும் மூன்று பக்கங்கள் மலையாலும் சூழப்பட்டுள்ளது. இதனால் திரிகோணமலை என்ற பெயர் வந்தது. திருக்குன்றாமலை, திருக்கோணாமலை என்பன செல்வம் குறையாத இடம் எனப் பொருள் தரும். திருக்கோணமலை என்றால் தெய்வத் தன்மை வாய்ந்தது என்பர். ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த சிவனிய அருளாளரான சம்பந்தர் தனது பாடலில் இதைக் கோணமாமலை என்றே குறிப்பிடுகின்றார்.

"திருகோணமலையானது கடலால் சூழப் பெற்றுள்ளது. இந்தக் கடலில் அலைகள் ஆரவாரித்து மோதுகின்றன. இந்தக் கடற்கரையிலே சந்தனம், அகில், முத்து, பவளம், செம்பொன், சிற்பி முதலியன கரை ஒதுங்குகின்றன. இங்கு பூஞ்சோலைகள் காணப்படுகின்றன. இவற்றில் காட்டு மல்லிகை, மாதவி, புன்னை, வேங்கை, செண்பகம், குருந்து, முல்லை முதலியன செழித்து வளர்ந்து உள்ளன. மக்கள் மிகவும் நெருக்கமாக வாழ்கின்றார்கள்." எனச் சிவனிய அருளாளர் சம்பந்தர் கூறுகிறார்.

குளக்கோட்டன் என்பவன் சோழ மரபைச் சேர்ந்த அரசன் ஆவான். இவனது இயற்பெயர் சோழங்க தேவன் ஆகும். இவன் கி.பி. 1223-1260 வரைத் திருகோணமலையை ஆண்டான். இவன் திருக்கோணசுவரத்தைப் புதுப்பித்தான். இந்தச் செய்திகளைப் புராணங்கள் மற்றும் கல்வெட்டுகள் வாயிலாக அறிய முடிகின்றது. இவனே கந்தாய்க் குளத்தைக் கட்டுவித்தான் எனவும் அறிய முடிகின்றது.

திருக்கோணமலையிலே கோணேசுவரம் மட்டுமன்றி வேறுபல பழமையான சைவ மற்றும் புத்த கோவில்களும் உள்ளன. இந்த வகையில் வெருகல் முருகன் கோயில், தம்பலகாமம் கோணேசுவரம் முதலியனவற்றைக் கூறலாம். திரியாயில் உள்ள புத்த கோவில் 2000 ஆண்டுகள் பழமையானது. இது மூடசிவன், மூத்தசிவன் என்ற தமிழ் மன்னரால் கட்டப்பட்டது. பெரிய குளத்தில் உள்ள புத்தகோவில் இராசஇராசசோழனால் கட்டப்பட்டது. இவைதவிர இங்கு பல புத்த கோவில் அழிபாடுகள் காணப்படுகின்றன. இவை கி.பி. ஏழாம் நூற்றாண்டுக்கு முன்பு தமிழர் புத்த சமயத்தைப் பின்பற்றியமைக்குச் சான்று ஆகும்.




திருகோணமலையில் ஒரு புகழ்பெற்ற துறைமுகம் உண்டு. இஃது உலகில் உள்ள நான்காவது பெரிய துறைமுகம் ஆகும். இது இயற்கைக் காப்பரண் கொண்டது. இதனால் இதைத் தம்மோடு வைத்திருக்கப் பல நாடுகள் போட்டி போட்டன. இப்பொழுதும் மறைமுகமாகப் போட்டி போடுகின்றன. இது இந்து மாகடலில் ஒரு முதன்மையான இடத்தில் அமைந்து உள்ளது. இதிலிருந்து இந்து மாகடல் முழுவதையும் கண்காணிக்க முடியும். 19ஆம் நூற்றாண்டில் பிரித்தானியக் கடற்படைத் தலைவராகப் பணிபுரிந்தவர் வில்சன் ஆவார். இவர் "எவன் திருகோணமலையை வைத்திருக்கின்றானோ அவனே இந்து மாகடலின் திறவுகோலை வைத்து இருந்தவன் ஆவான்" என்று கூறியுள்ளார்.

திருகோணமலைத் துறைமுகத்துக்குப் பக்கத்தில் பிரித்தானியரது கடற்படை மற்றும் வான்படைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளங்கள் அமைந்து இருந்தன. இரண்டாம் உலகப் போரின் பொழுது யப்பானியர் இவற்றின் மீது குண்டு வீசித் தாக்கினர். இங்கு பிரித்தானியரால் நிறுவப்பெற்ற 99 பெரிய நிலநெய்க் குதங்கள் உள்ளன. இவை அன்றும் இன்றும் எரிபொருள் வழங்கும் நிலையங்களாக உள்ளன.



இலங்கையின் மிக நீண்ட ஆறு மகாவலி கங்கை ஆகும். இது திருகோணமலை ஊடாகப் பாய்ந்து கடலில் கலக்கிறது. மேலும் மற்றுமொரு நீண்ட நதியான யான்ஆறும் இம்மாவட்டத்தின் வழியாகப் பாய்ந்து வாரியில் சேருகிறது. திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய்க் குளம், பன்குளம், பெரிய விளாங்குளம், நீலப்பணிக்கன் குளம், அல்லைக் குளம் முதலிய பெருங் குளங்கள் உள்ளன. இவை நெற் செய்கைக்கான நீரை வழங்குகின்றன. இங்கு கரும்புச் செய்கையும் கணிசமான அளவு நடைபெறுகிறது.

திருகோணமலை மாவட்டத்தின் முதன்மையான தொழில் நெற்செய்கை ஆகும். இங்குள்ள பல்வேறு குளங்கள் மற்றும் அணைக் கட்டுகளின் வாயிலாக நெற்செய்கை நடைபெறுகின்றது. மேலும் கால்நடை வளர்ப்பும் சிறப்பாக நடைபெறுகின்றது. திருகோணமலையில் ஏறத்தாழ 60 கல் நீளமான கடற்கரை உள்ளது. இது கொக்கிளாய் முதல் வெருகல் வரை நீண்டு உள்ளது. இங்கு மீன்பிடித் தொழில் பெருமளவு நடைபெறுகின்றது.

இந்த மாவட்டத்தின் இல்மனைட், உறுாட்ரைல், சிலிமனைட், மொனசைட், சேக்கோன் முதலிய கனிம வளங்கள் உள்ளன. புல்மோட்டை என்னும் இடத்தில் இவை தூய்மை ஆக்கப்பட்டுப் பிரிக்கப்படுகின்றன. பின்பு இவை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. கந்தளாய் என்னும் இடத்தில் சீனித் தொழிற்சாலை ஒன்று அமைந்துள்ளது. சீனன் குடா என்னும் இடத்தில் பெரிய மா அரைக்கும் ஆலை ஒன்றும் அமைந்து உள்ளது. இவை மூன்றும் முதன்மையான கைத்தொழில் நடுவங்கள்ஆகும். மேலும் ஆங்காங்கே ஆடை தைக்கும் தொழிற்சாலைகளும் காணப்படுகின்றன.

திருகோணமலை மாவட்டத்தில் பல சுற்றுலா நடுவங்கள் உள்ளன. உப்புவெளி, நிலாவெளி, குச்சவெளி, கடற்கரைகள், சுற்றுலாச் செலவரைக் கவரும் இடங்கள் ஆகும். இக்கடற்கரைகள் தூய வெண்மணலையும் ஆழமற்ற கடலையும் கொண்டுள்ளன. கன்னியா என்னும் இடத்தில் ஏழு வென்னீர் ஊற்றுகள் உள்ளன. இவை அருகருகே அமைந்து உள்ளன. எனினும், வெவ்வேறு வெப்பநிலை கொண்டவை ஆகும். இவை இலங்கை வேந்தனான இராவணன் தன் அன்னைக்கு இறுதிச் சடங்குகள் செய்த பொழுது தோன்றின என்று கூறுவர்.

திருகோணமலை மாவட்டம் பழங்காலத்தில் சோழர், பாண்டியர் ஆகிய தமிழர் மன்னரால் ஆளப்பட்டுள்ளது. பின்பு யாழ்ப்பாண அரசு, கண்டி அரசு ஆகியவற்றின் ஆட்சியின் கீழ் இருந்து உள்ளது. கி.பி. 1622 - 1693 வரைப் போர்த்துக்கேயரின் ஆட்சியின் கீழ் இருந்துள்ளது. கி.பி. 1693-1795 வரை ஒல்லாந்தரின் ஆட்சியின் கீழ் இருந்துள்ளது. கி.பி. 1796 - 1948வரை பிரித்தானியர் ஆட்சியின் கீழ் இருந்துள்ளது. இவற்றின் எச்சங்களை இன்றும் காணலாம். கி.பி. 1624ஆம் ஆண்டு கொன்ஸ்ரைன் டீசா என்ற போர்த்துக்கேயப் படைத்தலைவன் கோணேசுவரர் கோவிலை இடித்து அழித்தான். அக்கற்களைக் கொண்டு கோட்டை கட்டுவித்தான்.


இங்குள்ள இடப்பெயர்கள் பல வரலாற்றோடு தொடர்பு உடையவை ஆகும். 'தென்னன்மரவடி' என்பது பாண்டியர் மரபின் வாழும் இடமாகும். 'திரியாய்' என்பது திருக்கோணேசுவரத்துக்கு ஆநெய்பும் திரியும் வழங்கும் இடம் என்ற பொருளில் வழங்கிவருகிறது. முத்தூர் என்பது முத்துக் குளிக்கும் இடம் என்ற பொருளில் வழங்கப்படுகின்றது, 'கந்தளாய்' என்பது மன்னன் ஒருவருக்கு கண் பார்வை கிடைத்த இடம் என்ற பொருளில் வழங்கப்படுகின்றது.

தமிழுக்குத் தொண்டு செய்த அறிஞர் பலர் திருகோணமலையைச் சேர்ந்தவர் ஆவர். த. கனகசுந்தரம்பிள்ளை, த. சரவணமுத்துப்பிள்ளை, வே. அகிலேசபிள்ளை முதலியோரது சொந்த மண் இதுவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலையில் தமிழர் எதிர்நோக்கும் வேலை வாய்ப்புச் சிக்கல்கள்


திருகோணமலை மாவட்டத்தில் நீண்ட காலமாகப் பிரித்தானியக் கடற்படைத் தளம் மற்றும் துறைமுகக் கப்பல் தளங்களில் இருந்து பொருட்களை ஏற்றல் இறக்கல், மீன்பிடி, வேளாண்மை, பண்ணைத் தொழில் ஆகியன வேலை வாய்ப்பு வழங்கும் மூலங்களாக இருந்து வந்துள்ளன.



கடந்த முப்பது ஆண்டுகளாக நிகழ்ந்த இன வன்முறையின் விளைவான இடப்பெயர்வுகள், அகதி முகாம் வாழ்வுகள் ஏற்பட்டதோடு மக்கள் வெளிநாடுகளை நோக்கி செல்லத் தொடங்கினர். மேலும் இன மோதலைக் காரணமாக வைத்து வெளிநாட்டு நிதியோடு அரச சார்பற்ற நிறுவனங்கள் பல எமது பகுதியில் உருவாக்கப்பட்டன. இந்த நிறுவனங்களுக்கு பல நூற்றுக்கணக்கான பணியாட்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டுத் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டன. இந்நிறுவனங்களில் வேலைக்கு அமர்த்தப்பட்ட பணியாட்களின் தகுதி மட்டம் பெரும்பாலும் குறைவாகவே காணப்பட்டது. ஆகக்கூடிய கல்வி மட்டமாக க. பொ. த. உயர்தரமே இருந்தது. எனினும், இவர்களுக்கு நிறுவனங்கள் கூடுதல் கொடுப்பனவுகள், ஊர்திகள், கையடக்கத் தொலைபேசிகள் குளிரூட்டப்பட்ட அறை முதலியவற்றை வழங்கின. இவ்வாறான சலுகைகளுக்கு பழக்கப்பட்டவர்களாக எமது இளந்தலை முறை காணப்படுகிறது.

2009ஆம் ஆண்டு போர் ஓய்வு நிலைக்கு வந்தபின்பு அரச சார்பற்ற நிறுவனங்கள் படிப்படியாக மூடப்பட்டன. பல நிறுவனங்கள் வெளியேற்றப்பட்டன. எமது மாவட்டத்தில் இருந்து அனைத்து வெளிநாட்டு நிறுவனங்களும் வெளியேறிவிட்டன. இதனால் நிறுவனங்களில் பணியாற்றிய எமது மக்களின் நிலை கேள்விக் குறியாக மாறியுள்ளது. இவ்வாறு மாறிய பணியாட்களில் கல்வித்தகமையில் உயர்ந்த நிலையில் உள்ள துறைசார் நிபுணத்துவம் பெற்ற சிலர் வேறு இடங்களுக்குத் தொழில் தேடிச் சென்று விட்டனர். எஞ்சியோர் வாழ்க்கையில் வெறுப்பு தற்கொலை முயற்சி, சமூக விரோதச் செயல்கள் முதலியவற்றில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

அது மட்டுமல்லாமல் உள்ளக இடம்பெயர்வால் உருவான நலன்புரி நிலைய வாழ்க்கையின் பலனாகப் பாரிய சமூகத்தாக்கம் ஒன்று உருவாகியுள்ளது. அதாவது கடின



உழைப்பாளிகளான உழவரும் மீனவரும் பல ஆண்டு காலமாக நலன்புரி நிலையத்தில் வாழ்ந்து இடருதவி பெற்று வாழ்க்கை நடத்திப் பழக்கப்பட்டதன் காரணமாக தொழிலுக்குச் செல்வதில் ஆர்வம் இல்லாது காணப்படுகிறனர். இன்றும் எமது மாவட்டத்தில் சம்பூர் பகுதி மீள் குடியேற்றப்படாமல் கிளிவெட்டி, பட்டித்திடல், கட்டைபறிச்சான் ஆகிய மூன்று நலன்புரி நிலையத்தில் மக்கள் வலுக்கட்டாயமாக முடக்கப்பட்டுள்ளனர்.

இதனை விடப் பாரிய சமூக ஒழுங்குச் சிக்கல் ஒன்றும் தோன்றியுள்ளது. அதாவது சிறுவயதில் திருமணம், ஒருவனுக்கு ஒருத்தி என்ற தமிழர் பண்பாட்டை மீறி ஒன்றுக்கு மேற்பட்டவர்களைத் திருமணம் செய்தல் அல்லது உறவு வைத்தல் என்ற நிலை தோன்றி உள்ளது. இதனால் பல


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பப் பிணக்குகள் தோன்றுகின்றன. இதன் விளைவாகப் பிள்ளைகள் அனாதைகளாக நடு வீதியில் விடப்படுகிறனர். இதன் விளைவாக் கல்வியறிவு அற்ற, பண்பாட்டு விழுமியங்களைப் பேணாத ஒரு சமூகம் படிப்படியாக உருவாக்கி வருகின்றது.



அது மட்டுமல்லாது எமது கிராமங்களில் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் பல காணப்படுகின்றன. இவர்களுக்கான வேலைவாய்ப்பு அவரவர் கிராமங்களில் கிடைப்பதில்லை. எனவே இவர்கள் அயல் கிராமங்களுக்கு மாற்று சமூகத்தில் நாட்கூலியாக வேலை தேடிச் செல்லவேண்டிய சூழ்நிலை காணப்படுகிறது. இதன் காரணமாக திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் இனக்கலப்புக்களும் பாலியல் அடிப்படையிலான பாதிப்புக்களும் ஏற்படுத்தப்படுகின்றன.



2009ஆண்டு ஆண்டு போர் ஓய்வு நிலைக்குப் பின்பு மறுவாழ்வு அழிக்கப்பட்ட போராளிகள் படிப்படியாக சமூகத்தில் இணைக்கப்படுகிறனர். இவர்களுக்குரிய தொழில் வாய்ப்பு வழங்குவது பற்றி எதுவும் நடைபெறவில்லை. உடலில் போர் வடுக்களுடன் காணப்படும் இவர்களினால் நாட்கூலியாகக் கூட வேலை செய்ய முடியாத ஒரு சூழல் உருவாகியுள்ளது. இதனைச் சாதகமாகப் பயன்படுத்திச் சில சக்திகள் இவர்களை எமது சமூகத்திற்கு எதிரானவர்களாகப் பயன்படுத்துவதனை ஒரு தொழிலாகக் கொண்டு செயற்படுத்தத் தொடங்கியுள்ளனர்.

அது மட்டுமல்லாமல் பெரிய தொழில் நிறுவனங்களில் இன்று தமிழ்ச் சமூகத்திற்கு தொழில் வாய்ப்பு வழங்கப்படுவதில்லை. புதிய பாலக் கட்டுமானங்கள், வீதி அபிவிருத்தி, குளம் கட்டுதல், இந்திய வீட்டுத் திட்டம் முதலியவற்றில் உருவாகும் வேலைகள் யாவும் அரச எந்திரத்தின் பரிந்துரையில் தென்பகுதியில் இருந்து இறக்குமதி செய்யப்படும் தொழிலாளருக்கே வழங்கப்படுகின்றன. இதனால் வடக்குக் கிழக்கு மாகாணத்தில் பணப்புழக்கம் இல்லாமல் காணப்படும் நிலை தோன்றியுள்ளது.


கடந்த காலங்களில் போர் காரணமாகப் பயிரிடப்படாத விவசாய நிலங்கள் இன்று மீண்டும் தமிழர் சென்று விவசாயம் செய்யமுடியாத நிலை தோன்றியுள்ளது. எடுத்துக்காட்டாக தென்னமரவடியில் உள்ள தமிழரது வயல் நிலம் ஆயுதம் தாங்கிய ஊர்காவல் படையால் பறிக்கப்பட்டுள்ளது. நீதிமன்ற ஆணையின் பின்பும் மூன்றாவது ஆண்டாக இது தொடர்கதையாக உள்ளது. இதேபோன்ற நிலை மூதூர், பன்குளம் பகுதிகளிலும் காணப்படுகின்றது. மீன்பாடுகளின் நிலையும் இதுவாகவே உள்ளது. எனவே தமிழ் சமூகத்தின் வேலை வாய்ப்பு என்பது பாரிய அறைகூவல்களை உடையதொன்றாக மாறியுள்ளது என்பதனை நாம் இன்று உணர தொடங்கியுள்ளோம் என்பதே உண்மையாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கன்னியா வெந்நீர் ஊற்று

திருகோணமலையை அடையாளப்படுத்தும் சின்னங்களில் முதன்மை பெற்று நிற்பன திருக்கோணேசுவரம், கன்னியா வெந்நீர் ஊற்று, துறைமுகம், தம்பலகாமம் கோணேசுவரர் கோவில், கங்குவேலிச் சிவன் கோயில் முதலியனவாகும். இந்த வரலாற்றுச் சின்னங்கள் மீது பழங்காலம் தொட்டு எதிர்மத வாதிகள் காட்டி வந்த அழிப்புக்கள், அட்டூழியங்கள் என்பன ஏராளமாகவே இருந்துள்ளன. இதை வரலாற்று பாடங்களில் இருந்து தெரிந்து கொண்டிருக்கிறோம். இந்த அழிப்புக்களின் இறுதியாக வந்து நிற்பதே கன்னியா வெந்நீர் ஊற்றுப் பகுதி எதிர்மத வாதிகளால் கபளீகரம் செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் காட்சியாகும்.

முள்ளிவாய்கால் போர் வெற்றி கொண்டதன் சாதனை எடுப்பாக 2010.10.05 அன்று கன்னியாவுக்கு வருகை தந்த மாவட்ட உயர் அதிகாரிகள் குழு ஒன்று கன்னியாவின் வரலாற்று குறிப்புகள் அடங்கிய பலகையையும் ஏனைய அடையாளப் பொருட்களையும் உடைத்துகொண்டு போனது மாத்திரமன்றி 1957ஆம் ஆண்டு முதல் உப்புவெளி கிராம சபையால் பராமரிக்கப்பட்டு வந்த உரிமைச் சான்றுகளை உடைத்தெறிந்து விட்டு இப்பகுதி தொல் பொருள் பகுதி எனப் பிரகடனப்படுத்திச் சென்றதுடன் உப்புவெளி பிரதேச சபைக்குரிய உரிமைகள் அனைத்தும் பறித்தெடுக்கப்பட்டன.



இராவணனுக்கும் கன்னியா வெந்நீர் ஊற்றுக்கும் இடையே உள்ள தொடர்பை விளக்கும் வரலாற்றுப் பலகையும் இந்த நாளன்று உடைத்தெறியப்பட்டது. இதன் முன்கட்ட நடவடிக்கையாக காணி ஆணையாளர் நாயகத்திற்கு 2009.11.26 ஆம் நாளிட்ட கடிதம் பின்வருமாறு உள்ளடக்கம் கொண்டதாக எழுதப்பட்டது. வெந்நீர் ஊற்றுக்கருகில் 0.420 கெக்ரெயர் பரப்பளவு உடைய காணியை வில்கம் இராஜமகா விகாராதிபதிக்கு நீண்ட காலக்குத்தகைக்கு வழங்குவதற்கு குறிப்பிட்ட படிவங்கள் நிறைவுபடுத்தப்பட்டு எனது சிபார்சுடன் தங்களுக்கு அனுப்பி வைக்கின்றேன் பிரதேச செயலாளர் பட்டணமும் சூழலும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதற்கிடையில் உப்புவெளி பிரதேச சபையினர் 2010.10.05அன்று நடைபெற்ற நிகழ்வை ஒட்டி 2010,10.06 அன்று பிரதேச சபையில் ஒருகண்டனத் தீர்மானத்தை நிறைவேற்றினர். பிரதேச சபை உறுப்பினர்கள் இந்த விடயம் சம்மந்தமாகத் திருகோணமலை பிரதேச செயலாளருக்கு ஒரு கடிதத்தை அனுப்பினர். இதில் கன்னியா வெந்நீர் ஊற்றும் அதனைச் சூழுவுள்ள பிரதேசமும் 1957ஆம் ஆண்டு திருகோணமலை அரசாங்க அதிபரால் உப்புவெளிக் கிராம சபைக்கு கையளிக்கப்பட்டது. அப்போதய அரசாங்க அதிபராக இருந்தவர் அன்டன் ரோத் வெல் மைசன் (யுவெழறெ சுழவா றநடட அயளைழநச 1954-1960) என்பவர் ஆவார். எனவே 50 வருடங்களுக்கு மேலாக உப்புவெளி பிரதேச சபையின் கட்டுப்பாட்டுக்குள் இருந்து வந்த வெந்நீர் ஊற்றுப்பகுதியை மீண்டும் எம்மிடம் ஒப்படைக்க ஆவன செய்யும்படி பிரதேச சபையினர் கோரிக்கை விட்டிருந்தனர்.

இதை ஒட்டி திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் அவர்கள் மாகாண காணி ஆணையாளருக்கு பின்வரும் அடக்கம் கொண்ட கடிதத்தை வரைந்தார். உப்புவெளி பட்டினமும் சூழலும் பிரதேச சபை கூறியுள்ளவாறு திருகோணமலை அரசாங்க அதிபரால் 1957ஆம் ஆண்டு பிரதேச சபைக்கு வழங்கப்பட்டதாக குறிப்பிடப்படும் மேற்படி காணி 1981. 11. 9ஆம் நாளிட்ட 47ஆம் இலக்க காணி நிர்ணய சட்டத்தின் 166.:.4 வர்த்தகமானி பிரசுரம் மூலம் அரசுடமை ஆக்கப்பட்டுள்ளது என நில அளவைத் திணைக்கள ஆவணங்களின் படி அறியமுடிகின்றது. அக்காணி குறிப்பிட்ட வரைபடத் துண்டில் 11 என அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இதுதவிர வேறு காணிகள் பிரதேச சபைக்கு இருக்கவில்லை எனக் குறிப்பிட்டிருந்தார்.

பிரதேச செயலாளரின் 2009.11.26 ஆம் நாளிட்ட கடிதத் சிபார்சுக்கு அமையக் காணிஆணையாளர் நாயகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்கம் இராஜமகாவிகாரை விகாராதிபதிக்கு வழங்கும் நோக்கில் 2010.6.4 ஆம் நாளிட்டு மேற்படி காணிக்கு அனுமதி வழங்கும் கடிதம் ஒன்றைக் கொழும்பு காணி ஆணையாளர் நாயகம் மாகாண காணி ஆணையாளருக்கு அனுப்பியிருந்தார்.

இதன் பிரகாரம் வெந்நீர் கிணற்றுக்கு மேலுள்ள பகுதியில் கிணற்றின் தெற்கு புறம் விகாரை ஒன்று வில்கம் இராஜமகாவிகாரை விகாராதிபதியால் 2010 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது எனக் குறிப்பிடப் படுகிறது.

வில்கம் இராஜமகாவிகாரை என்பது கன்னியா வெந்நீர் ஊற்றில் இருந்து 4 கி.மீ தொலைவில் உள்ள ஒரு விகாரையாகும். 30 ஏக்கர் பரப்பில் இவ்விகாரை அமைக்கப்பட்டுள்ளது. இது உண்மையில் இராஜராஜப் பெரும் பள்ளி என்ற வரலாற்று பெயர் கொண்டது. இது சோழப் பேரரசு அமைந்திருந்த காலத்தில் நிறுவப்பட்டது. இந்தக் கோவில் பறிபோன வரலாறு இன்னுமொரு ஆய்வாக மேற்கொள்ளப்படவேண்டியது. இந்த ஆலயத்தின் நிர்வாக எல்லைக்குள் உண்டாக்கப்படும் விகாரையாக தற்பொழுது கன்னியா வெந்நீர் கிணற்றடியில் அமைக்கப்பட்ட விகாரை கருதப்படுகிறது. இத்தகைய நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கும் கன்னியா வெந்நீர் ஊற்றின் வரலாற்றை மிகச் சுருக்கமாக அறிந்து கொள்வது நன்று.

இந்த ஊற்றுக்கள் இலங்கை வேந்தன் இராவணனால் தன் தாயாரின் ஈமைச்சடங்குகளைச் செய்வதற்கு உருவாக்கப்பட்டவை என இராமாயணம் குறிப்பிடுகிறது. கன்னியாவின் உருவாக்கம் பற்றி திருகோணேச்சல வைபவம் எனும் நூல் பின்வருமாறு கூறுகின்றது. "தாயாரின் வழிபாட்டுக்காக சிவலிங்கம் பெற திருகோணணேசுவரம் வந்த இராவணன் இலிங்கம் பெற பல முயற்சிகளை மேற்கொண்டான். அவன் இலிங்கத்தை பெற்று பிரதிட்டை செய்துவிட்டால் அவனை வெல்ல யாராரும் முடியாது என்பதை உணர்ந்த திருமால் அவன் சிவலிங்கத்தை அடையாவண்ணம் முனிவர் வேடம் தாங்கி வந்து உன்தாய் இறந்துவிட்டாள்" எனக் கூறியது கேட்டுப் புலம்பிய இராவணன் முனிவர் வேடம் தாங்கி வந்த திருமாலிடம் தனது தாயாரின் ஈமைக் கிரியைகளை செய்து தரும்படி வேண்டினான். அதற்கு உடன் பட்ட முனிவர் இராவணனை அழைத்துக்கொண்டு திருகோணமலைக்கு மேற்கு திசையாக உள்ள கன்னிகா எனும் தலத்துக்கு போய் அவ்விடத்தில் தனது கையில் உள்ள தண்டியால் ஏழு இடத்தில் ஊன்றினார். முனிவர் ஊன்றிய ஏழு இடத்திலும் கடும் சூடு, இளஞ்சூடு, கடுங்குளிர், இளங்குளிர் முதலிய ஏழுவகைப் பேதமுள்ள ஏழு கூவல்கள் உண்டாகின.

இன்னுமொரு ஆய்வின்படி கன்னி என்னும் சொல்லுக்கு கற்றாளை பொருளுமுண்டு. இத்தாவரத்தின் அடியாகவே கன்னியா என்னும் பெயர் பெற்றிருக்கலாம் என்ற கருத்து கூறப்படுகின்றது. இவை புராணம் இதிகாசம் சார்ந்த கதைகளாகக் கூறப்பட்ட போதும் கோணேசருடன் தொடர்புபட்ட விடயங்கள் பின்னப் படவில்லையென்றே சொல்லப்பட வேண்டும்.

இராவணன் காலத்தின் பின் எமக்கு 1786 இல் ஒல்லாந்து ஆளுநர் JAQUES FABRICE VAN SENDEN அவர்களின் திருகோணமலை மாவட்ட சுற்றுப்பயண அறிக்கையில் கன்னியா வெந்நீர் ஊற்றுப்பற்றிய சிறுகுறிப்புக்கள் இவ்வாறு இடம் பெறுகின்றன. யூன் 20ஆந் திகதி (20.06.1786) இறம்பைக்குளத்துக்கு நான் சென்றபோது ஐரோப்பிய படை வீரன் ஒருவன் காட்டில் இருப்பதாக தகவல் கிடைத்தது. அவனைப் பிடித்தபோது நோயாளி போன்று காட்சி அளித்ததான். அவன் கால்கள் மிக மோசமாக வீங்கிக் காணப்பட்டன. அவன் வெந்நீர் கிணற்றுக்கு அருகில் உள்ள உரோமத் தேவாலயத்துக்கு வணங்கச்சென்றபோது குழுவென்று தன்னைப் பிடித்ததாகவும் சொன்னான். இந்தக்குறிப்பின் படி வெந்நீர்க் நீர்க் கிணறு அக்காலத்தில் பிரசித்தி பெற்றதாக இருக்கவேண்டும்.

ஒல்லாந்த ஆளுநரின் பயணக்குறிப்பில் இன்னுமொரு விடயம் குறிப்பிடப்பட்டிருந்தது. பிடிபட்ட ஐரோப்பிய படை வீரனை விசாரனை செய்த ஆளுநர் நீ வெகுதொலைவில் உள்ள வெந்நீர் ஊற்றுக்கு குளிக்க செல்ல உரிமையில்லை என் அந்தப் படைவீரனை வெருட்டியதிலிருந்து அக்காலப் பகுதியிலேயே வெந்நீர் ஊற்று யாவராலும் அறியப்பட்டதாக இருந்திருக்கின்றது என்பதனை ஊகிக்கமுடிகின்றது.

இன்னுமொரு குறிப்பில் ஒல்லாந்த ஆளுநர் குறிப்பிடப்பட்டிருப்பதாவது பி.பகல் 1.15 மணியளவில் பன்குளத்துக்கு புறப்பட்டு அதன் பின் நிலாவெளிக்கும் வெந்நீர் குளிப்பிற்கும் இடையில் அமைந்துள்ள கரடிக் கோட்டை கிராமத்திற்குப் போகவில்லை அது இப்போது குடிமக்களால் கைவிடப்பட்டுள்ளது.

ஒலாந்தர்களால் குறிப்புக்கள் மூலம் கன்னியா மிக நீண்ட வரலாற்றைக்கொண்ட ஓர் இடமாக இருந்திருக்கிறது என்பதை அறிய முடிகிறது. இத்தகையதொரு குறிப்பையே 1890ஆம் ஆண்டுகளில் பிரித்தானிய ஆளுநர் குறிப்புக்களில் இருந்தும் பெறமுடிகிறது. கன்னியா ஊற்றிலிருந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலை நகரத்திற்கும் கடற்படை தளத்திற்கும் நீா் வழங்குவது குறித்து அரச அதிபா் CHARLES EDWARD DUCAT PENNYAUICK (1886-1890) அவா்களால் விவாதிக்கப்பட்டிருக்கிறது.

1869 ஆம் ஆண்டு திருகோணமலை மாவட்டம் கட்டுக்குளம் பற்று, தம்பலகாமம் பற்று, கொட்டியாரப் பற்று திருகோணமலை நகரம் என நான்கு வருவாய் வட்டாரங்களாக பிரிக்கப்பட்டது. 1905ஆம் ஆண்டு திருகோணமலை மாவட்டம் 5 வன்னியப் பெரும்பிரிவுகளாக பிரிக்கப்பட்டது. இந்த 5 பெரும் பிரிவுகளும் 31 விதானைப் பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருந்தது. இந்த பிரிவுகளுக்குள் 120 கிராமங்கள் காணப்பட்டன. இதில் முக்கியமான ஒரு கிராமமாக கன்னியா இருந்துள்ளது. இதனடிப்படையில் 1905 மாசி மாதம் பேராதனையிலிருந்து வந்த தாவரவியல் கண்காணிப்பாளா் HER BERT WRIGHT கன்னியாவுக்கு உப்பாற்றுக்கும் சென்று பல புதிய தாவரங்கள் வளா்வதற்கான ஆய்வுகளைச் செய்தாா். கன்னியாவில் ஊநுயுசுயு சுருடீடீநுசு வளா்ப்பது குறித்து ஆய்வுகள் மேற்கொண்டாா். இவ்வாறான சிறிய தகவற் குறிப்புக்கள் மூலம் கன்னியா என்னும் இடம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் வரலாற்று தொடா்புகளைக் கொண்டதாகவும் இருந்து வந்துள்ளது என்பதை அறிய முடிகிறது.

இனிக் கன்னியாவின் உரிமை தொடா்பான விடயங்களை நோக்குவோம். மடத்தடியில் உள்ள மாரியம்மன் கோவிலுக்கும் கன்னியா வெந்நீா் ஊற்றுக்கும் இடைத்தொடா்பைக் காட்டும் கதை ஒன்று வாய்வழியாக இருந்துவருகின்றது. மாரியமன் ஆலயம் 300 ஆண்டு பழமைவாய்ந்தது. அந்த மாரி அம்மனைக் கும்பத்தில் கட்டி வைத்து அக்கும்பத்தை இக்கோவிலிலிருந்து புறப்பாடு செய்து வீதிகளில்ஆண்டுதோறும் குறித்த தினத்தில் எடுத்து செல்வது நீண்டகால வழக்கம். இக்கும்பம் கன்னியாவுக்கும் எடுத்து செல்வது வழக்கமாக இருந்தது. திருகோணமலையை பறங்கியா் ஆட்சி செய்த காலத்தில் (1623-1638)ஓரு நாள் இக்கும்பம் கன்னியாவுக்கு கொண்டு செல்லப்பட்ட போது அந்த பறங்கியா் அதிகாாி கும்பத்தை எளனம் செய்து காலால் உதைத்து தள்ளிவிட்டான். திடீரென அவனுக்கு குணங்கான முடியா நோய் எற்பட்டதாகவும் அதிலிருந்து தெய்வாதீனமாக உயிா்பிழைத்த அதிகாாி தான் செய்த பாவத்துக்கு பாிகாரமாக கன்னியா பிரதேச காணியையும் கமுகம் சோலை காணியையும் நன்கொடையாக மாாியம்மனுக்குத் தானம் பண்ணினான் என்பது அக்கதையாகும்.

கன்னியா வெந்நீா் ஊற்றும் அதன் அருகிலிருக்கும் பிள்ளையாா் கோயிலும் என்னும் தலைப்பில் 2009ஆம் ஆண்டு ஆடி 20 ஆம் நாள் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினா் இரா.சம்பந்தன் அவா்கள் தற்போதைய பொருளாதார அமைச்சா் பஸில் ராஜபக்சா அவா்களுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தாா். அதில் அவா் குறிப்பிட்டதாவது.

திருகோணமலையில் கோணேஸ்வரம் கோயிலுக்கு அருகில் தனது தாயாின் 31ஆம் நினைவுக் கிாியைகளை நடாத்த விரும்பிய இராவணன் கன்னியாவில் புனித நீரைப்பெற்று கொள்வதற்காக ஒன்றுக்கு ஒன்று அருகே ஏழு இடங்களில் தனது வாளினால் தோண்டினான். ஒவ்வொன்றும் வெவ்வேறு வெப்ப நிலை கொண்ட ஏழு வெந்நீா் ஊற்றுக்கள் பீறிட்டன. இந்த ஏழு ஊற்றுக்கள் தான் கன்னியாவில் அமைந்துள்ள கிணறுகள் ஆகும். அன்றிலிருந்து இந்துக்கள் தமது உறவுகளின் 31ஆம் நினைவுக் கிாியைகளை கன்னியாவில் நிறைவேற்றி வந்துள்ளனா். இந்த கிாியைகள் நடாத்துவதற்கான மடங்கள் தோன்றின. இந்துக்கள் முதலாவது வழிபடும் தெய்வம் கணபதியாகும். கணபதிக் கோயில் நினைவுக்கு எட்டிய காலம் தொட்டு வெந்நீா்க் கிணறுகளுக்கு முன்னே இருந்துள்ளது. அந்தியேட்டியை செய்வதற்கு முன் மக்கள் பிள்ளையாா் கோவிலில் வழிபடுவாா். இது பல நுற்றாண்டு காலமாக நடைபெற்று வந்துள்ளன. அத்துடன் அது பிரசித்தமானது எனவும் திரு சம்பந்தன் அவா்கள் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தாா்.

ஜோன் டேவி என்னும் ஆராச்சியாளா் கி.பி1821ம் ஆண்டு வெளியிட்ட இலங்கையின் உட்பகுதியின் விபரம் என்ற குறிப்பில் திருகோணமலையிலுள்ள கன்னியா வெந்நீா் ஊற்றுப் பற்றி குறிப்பிட்டிருந்தது முக்கியம் வாய்ந்த பதிவாக கருதப்படுகின்றது அவா் குறிப்பிட்ட விபரம் இதுதான்.

1817ம் ஆண்டு ஒக்டோபா் 19ஆந் திகதி தான் வெந்நீா் ஊற்றை தாிசிக்கச் சென்ற போது ஒவ்வொரு கிணறுகளின் வெப்ப நிலைகளும் பின்வருமாறு அமைந்திருந்தது. 101 பாகை, 101.5பாகை, 107 பாகை,88.5 பாகை, 86 பாகை,105 பாகை,75 பாகை,91 பாகை. இக்கிணறுகளில் மிகவும் கூடிய வெப்ப நிலையாக 107 பாகை. மிகக் குறைந்த வெப்பநிலையாக 88.5 இருந்தது. வெவ்வேறு நேர அளவுகள் கொண்டு நீாின் வெப்பநிலையை அளந்து பாா்த்த போது வளியின் வெப்பம் அதிகாிக்க வெந்நீாின் வெப்பம் குறைந்து கொண்டே சென்றது எனக் குறிப்பிட்டதுடன் அதனுடைய மருத்துவப் பயனைப் பற்றி பின்வருமாறு டேவி குறிப்பிட்டிருந்தாா். "THE WATER IS USED CHIEFLY FOR RHEUMATISM AND CUTANEONS DISEASES" இதன் படி இந்த வெந்நீா்க்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிணற்றில் நீராடுவொருக்கு வாத சரும நோய் நீங்கும். அதற்குக் காரணம் அந்நீரில் உள்ள இரசாயனப் பொருட்களேயாகுமென அவர் தனது குறிப்பில் குறிப்பிட்டடிருந்தார். இதன் மூலம் 18ஆம் நுற்றாண்டிற்கு முன்பிருந்தே கன்னியா வெந்நீர் ஊற்றும் அதை சூழவுள்ள பகுதியும் பிரசித்தி பெற்று விளங்கியிருக்கின்றன என்பது தெரியவருகின்றது.

முன்பு கூறியதைப் போல மீண்டும் கன்னியா உரிமை பற்றிய விவாகரத்துக்கு வருவோம். பறங்கிய அதிகாரி ஒருவனால் திருகோணமலை மடத்தடி மாரியம்மன் ஆலய தர்மகத்தாவுக்கோ அல்லது ஆலயத்துக்கோ தானமாகக் கொடுக்கப்பட்ட வெந்நீர் ஊற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதியும் குறித்த ஆலயத்துக்கே உரித்தாக்கப்பட்டன என்பதற்கு ஆதாரமாக சில ஆவணங்கள் சான்று காட்டி நிற்பதைக் காணக் கூடியதாகவுள்ளன.

கொழும்பு நிலவளவை ஆணையாளர் நாயகத்தின் PLAN OF FOUR ALLOTMENTS OF LAND என்ற வரைபில் 1896 பெப்ரவரி 21 அன்று பின்வரும் விடயங்கள் அடையாளமிட்டுக் காட்டப்பட்டுள்ளன. வெந்நீர் ஊற்று, பிள்ளையார் ஆலயம், நீர்வீழ்ச்சி என குறித்துக் காட்டியது போல் மூன்று துண்டுகளாக வகுக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. கன்னியா வெந்நீர் ஊற்றுப்பகுதியும் அதைச் சூழவுள்ள பகுதியும் யாருக்குச் சொந்தமானது அல்லது உரித்துடையது என்ற சர்ச்சை எப்பொழுது கிளப்பிவிடப்பட்டு இருக்கின்றதை தெரிந்து கொண்டு அதன் பின்னுள்ள வரலாற்று மாயங்களையும் ஆட்சிப்பிடிப்புக்கள் பற்றியும் தொடர்ச்சியாக பார்ப்போம்.

கன்னியா வெந்நீர் ஊற்று இந்துக்களின் இயல்பான வாழ்க்கையோடு ஒன்றிப் போன ஓரு பிரதேசம் என்பதை இதிகாசம் புராணம் மூலம் சொல்லப்பட்டிருக்கின்ற விடயமாக இருந்த போதும் இந்தப் பிரதேசத்தின் மீது சிறிய அளவில் கூட 1980ஆம் ஆண்டு வரை ஏனைய மதத்தவர் உரிமை பாராட்டாத ஒரு பிரதேசமாக இருந்துள்ளது. அதற்கு சவால்கள் எந்த மதத்தவராலும் முன்வைக்கப் படவில்லை.

வெந்நீர் ஊற்றை அண்டியிருந்த வரலாற்றுத் தொன்மை கொண்ட பிள்ளையார் கோவில் 1983ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட வன்செயல்கள் காரணமாக அழிக்கப்பட்டது. கன்னியாப் பிரதேசம் மக்கள் செல்ல முடியாத சூனியப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. இருந்த போதும் சில சிவ அன்பர்கள் விக்கிரகத்தை காப்பாற்றி சிறு கொட்டில் ஒன்று அமைத்து பூசை செய்து வந்தார்கள்.

கன்னியா பிள்ளையார் ஆலயம் இடித்து அழிக்கப்பட்டஅதே காலப்பகுதியில் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள சுமார் 18 மேற்பட்ட கோவில்கள் விசமிகளால் இடித்தும் களவாடப்பட்டும் தீயிடப்பட்டும் அழிக்கப்பட்டன. இடிபட்டுப்போய் கிடந்த கன்னியா பிள்ளையார் ஆலயத்தை2004ஆம் ஆண்டு புனரமைப்பு செய்து சிறிய கொட்டிலிலுள்ள விக்கிரகத்தை உரிய ஆலயத்தில் வைக்க உப்புவெளி பிரதேச சபை முயற்சிகளை மேற்கொண்ட போது தான் புதிய பிரச்சனை ஒன்று உருவாக்கப்பட்டது. பிள்ளையார் கோயில் உள்ள இடம் பெரிய குளம் வில்கம் விகாரைக்குச் சொந்தமானது. அந்த வரலாற்று தடயத்தை அழிக்கவும் இல்லாமல் செய்யவும் புனர் நிர்மாணம் என்ற பெயரில் கோயிலை புதிதாக கட்டப் புறப்படுகின்றார்கள். புராதன காலத்து பௌத்த அடையாளங்களை தொல் பொருள் நிலைகளை அழிக்க முற்படுகின்றார்கள் என வில்கம் விகாரையை சேர்ந்த பௌத்த குரு உப்புவெளி காவல் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றை இட்டிருந்தார். இந்த முறைபாட்டின் நிமிர்த்தம் தொல்பொருள் ஆதாரங்கள் சிதைக்க முற்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பெயரில் உப்புவெளி பிரதேச சபை அதிகாரிகளை கைது செய்து அனுகிய போது இக்கோவில் ரி.இரத்தினம்மா என்னும் மணியக்காரருக்கு சொந்தமானது என கொடுக்கப்பட்ட தகவலின் அடிப்படையில் அவர் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார். ஆனால் திருகோணமலை நீதிமன்றத்தில் தொல் பொருள் ஆய்வு சட்டத்தின் கீழ் தர்மகர்த்தா இரத்தினம்மா மேல் வழக்கு தொடரப்பட்டது. இதற்கு பிரதான சாட்சியாக வில்கம் விகாரை பிரதான குரு ஆக்கப்பட்டிருந்தார். நான்கு வருடம் திருகோணமலை நீதிமன்றில் நிலுவையில் இருந்த வழக்கு போதிய சாட்சியங்களும் ஆதாரமும் இல்லாமல் பிரதான சாட்சி ஒன்றுக்கு மேற்பட்ட தவணை நீதிமன்றத்துக்கு வருகை தராத காரணத்தால் வழக்கு 2008 ஏப்ரல் மாதம் தள்ளுபடி செய்யப்பட்டது.

கன்னியா வெந்நீர் ஊற்றுக் கிணறுகள் அதன் உரிமை பற்றிய பல் வேறு வழக்குகள் பல்வேறு காலங்களில் தொடுக்கப்பட்டுள்ளன. அவை பற்றிப் பின்பு நோக்குவோம். இத்தகைய ஒரு மதக்கொடூரம் திருகோணமலை மாவட்டத்தில் இன்று நேற்று மாத்திரம் அல்ல பல வருடங்களாக இடம் பெற்று வருகின்றது. கோணேசர் ஆலயத்தை புனித நகர் ஆக்க வேண்டும் என்ற நோக்குடன் 1968ஆம் ஆண்டளவில் அன்றைய டட்லி சேனாநாயக்கா அரசின் உள்ளுராட்சி அமைச்சராக இருந்த மாண்புமிகு எம்.திருச்செல்வம் அவர்கள் அரசின் அனுமதியுடன் கோணேசர் கோயிலையும் அதன் சுற்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறத்தையும் புனித பிரதேசமாக பிரகடனப்படுத்த வேண்டிய எல்லையை நிர்ணயிப்பதற்காக மூவர் கொண்ட குழுவை நியமித்தார் இது 1968.08.23 அன்று அரச வர்த்தமானியில் பிரகடனப் படுத்தப்பட்டிருந்தது.

இக்குழுவின் நியமனத்திற்கு சேருவில பௌத்த விகாராதிபதி கடும் எதிர்ப்பு தெரிவித்திருந்தார். இதனால் அமைச்சர் திருச்செல்வம் அவர்களை கலந்து ஆலோசிக்காமலே பிரதமர் டட்லி சேனாநாயக்கா குழுவை இரத்துச் செய்தார். இதனை எற்காத திருச்செல்வம் 1968.09.16ஆம் திகதி தனது மந்திரிப் பதவியை இராஜினாமா செய்தார். அதோடு கோணேசர் கோயில் புனித நகர் விவாகரத்துக்கு முடிவுகட்டப்பட்டது.

கன்னியாவையும் அதன் சுற்று புறத்தையும் பூர்வீக உரிமை பாராட்டி இடிபட்ட ஆலயத்தை புனரமைப்பு செய்ய தடுத்துக் கொண்டிருக்கும் வில்கம் விகாரைக்கும் கன்னியா பிரதேசத்துக்கும் எவ்வகைத் தொடர்புகள் வரலாற்று வகையிலும் ஏனைய வகையிலும் இருக்க முடியும் என்பதை சிறிது நோக்க வேண்டும்.

கன்னியா வெந்நீர் ஊற்றுப் பகுதியிலிருந்து சுமார் பத்து கிலோ மீற்றர் தொலைவில் வனம் அடர்ந்த பிரதேசத்தில் அமைந்திருப்பது வில்கம் விகாரையாகும். கன்னியா வெந்நீர் ஊற்றானது திருகோணமலை அனுராதபுரம் வீதியில் உள்ள நுழைவாக சுமார் இரண்டு கிலோ மீற்றர் தொலைவில் அமைந்திருக்கின்றது. இச்சந்தியில் இருந்து சுமார் நான்கு கிலோ மீற்றர் தொலைவில் அனுராதபுரம் பிரதான வீதியிலிருந்து உள்நுழைவாக ஏழு கிலோ மீற்றர் தொலைவில் வில்கம் விகாரை அமைந்திருக்கின்றது.

வில்கம் விகாரைக்கும் கன்னியா வெந்நீர் ஊற்றுக்கும் இடையில் ஏதாவது வரலாற்றுத் தொடர்பு உண்டா இந்த விகாரையின் தொன்மை சார் தொடர்பு கன்னியாவுடன் இருந்திருக்க முடியுமா என்பதை சில வரலாற்று முறையில் ஆராய வேண்டிய தேவை இருக்கின்றது. என்பதால் இவ்விகாரையைப் பற்றி வரலாற்று மூலாதாரங்களை முதலில் தெரிந்து கொள்வது நன்று.

